


# மாயவலை



பா. ராகவன்

கல்லத் விவகாரத்துக்குப் பிறகு ஒரு சமாசாரம் நடந்தது. நல்லவனோ கெட்டவனோ, கால் இருக்கிறவனோ, இல்லாதவனோ. நீ ஏமனிலிருந்து அமெரிக்கா செல்ல விரும்புகிறாயா? உனக்கு விசா கிடையாது. கட் அண்ட் ரைட்டாகச் சொல்லிவிட்டது அமெரிக்க அரசாங்கம். இது அல் காயிதாவுக்குப் பெரிய பிரச்னையாகிவிட்டது. ஏனென்றால், திட்டத்துக்காக ஒசாமா பின்லேடனும் காலீத் ஷேக் முகம்மதுவும் யோசித்து வைத்திருந்த நபர்களில் பலபேர், ஏமன் நாட்டைச் சேர்ந்தவர்கள். ஒரு சோம்பேறி மாட்டிக்கொண்டு, மற்ற அத்தனை பேர் பிழைப்பையும் கெடுத்தானே என்கிற கடுப்பு அவர்களுக்கு.

ஆனால் வருத்தப்பட்டுக்கொண்டோ, கோபப்பட்டுக்கொண்டோ உட்கார்ந்திருக்க முடியாது. என்ன மாற்று ஏற்பாடு செய்யலாம் என்று யோசித்தார்கள். இறுதியில், கறை படியாத சவூதி அரேபியாக்காரர்களாகப் பார்த்துத் தேர்ந்தெடுத்தால், பிரச்னை வராது என்று முடிவு செய்தார்கள்.

அதாவது, முன்னதாக எந்த அரை பிளேடு கேஸிலும் மாட்டிக்கொண்டிராத ஆசாமிகள். அன்னார், சவூதிக்காரராக இருந்துவிடும் பட்சத்தில், அமெரிக்கா போவதில் பெரிய பிரச்னை ஏதும் வராது. காரணம், சவூதி அரசுக்கும் அமெரிக்க அரசுக்கும் இடையே இருக்கும் நல்லுறவு. அத்தனை விவகாரங்களிலும் கொஞ்சிக் குலாவிக்கொண்டிருக்கிறவர்கள், இந்த ஒரு விஷயத்தில் மட்டும் எப்படி வேறு மாதிரி இருந்துவிடுவார்கள்?

தவிரவும் சவூதி குடிமகன்களையே கொண்டு அமெரிக்க இலக்குகளைத் தாக்கி அழிப்பதன்மூலம், அமெரிக்காவுக்கும் சவூதிக்கும் கொஞ்சம் முட்டிக்கொள்ளும் சாத்தியமும் உண்டே? எத்தனை அருமையான விஷயம் இது!

ஆகவே, அதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்யச் சொல்லிவிட்டு, முதல் கட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட (கல்லத் உள்பட! அவனை எப்படியும் அனுப்பியே தீர்வது என்றுதான் கடைசி வரை முயற்சி செய்திருக்கிறார்கள்.) நான்கு பேரையும் ஆப்கனிஸ்தானுக்குப் பயிற்சிக்காக வரவழைத்தார்கள்.

மெஸ் ஐனக் (Mes Aynak) என்ற பயிற்சி முகாமில் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடந்தன. ரொம்ப முக்கியமான தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுபவர்களுக்கு மட்டும், இந்த இடத்தில் ஒசாமா பின்லேடனின் நேரடி மேற்பார்வையில் பயிற்சியளிக்கப்படுவது வழக்கம். ஒருகாலத்தில் சோவியத் யூனியன் ஆப்கனில் உட்கார்ந்து நாட்டாமை செய்துகொண்டிருந்தபோது, அந்த இடத்தில் ஒரு தாமிரச் சுரங்கம் செயல்பட்டு வந்தது. பிறகு, காலப்போக்கில் சுரங்கப் பணிகள் நிறுத்தப்பட்டு, சுரங்கம் மூடப்பட்டதும் அல்காயிதா அவ்விடத்தைத் தன் பயிற்சிக்களமாகப் பயன்படுத்திக்கொள்ளத் தொடங்கியது.

காலித் அல் மிஹ்தர், நவாஃப் அல் ஹஜ்மி, கல்லத், அபு பாரா அல் ஏமனி ஆகிய அந்த நான்கு பேருடன் இன்னும் முப்பது பேருக்கும் இந்தப் பயிற்சி முகாமில் சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. உடல் உறுதிப் பரிசோதனைகள், ஆயுதப் பயிற்சிகள், இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கும் பயிற்சி, மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தபடி துப்பாக்கியால் சுடும் பயிற்சி, இரவுகளில் தாக்குதல் நடத்துவது தொடர்பான பயிற்சிகள் இத்தியாதி. சயீஃப் அல் அதுல் என்ற மூத்த அல்காயிதா கமாண்டர் ஒருவர் மூலம் கமாண்டோ பயிற்சிகளும் தரப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

பயிற்சியில் கலந்துகொண்ட அந்த முப்பது உருப்படிகள் யார் யார், அப்புறம் என்ன ஆனார்கள் என்கிற விவரம் தெரியவில்லை. ஆனால், அந்த முதல் நான்கு பேரையும் பயிற்சி முடிந்த கையோடு காலீத் ஷேக் கராச்சிக்குத் தள்ளிக்கொண்டு போனார். அங்கே அவர்களுக்குச் சில தியரி வகுப்புகள் இருந்தன.

அமெரிக்கா என்பது கறுப்பா சிவப்பா? அமெரிக்க இங்கிலீஷை சுமாராகவாவது எப்படிப் புரிந்துகொள்வது / பேசுவது? எங்கெங்கே அவர்கள் பயணம் செய்யவேண்டியிருக்கும்? அந்தந்த ஊரின் சீதோஷணம் எப்படி? மக்கள் மனோபாவம் எப்படி? எப்படிப் பழகுவார்கள்? இவர்கள் எப்படி அந்தக் கூட்டத்தில் கலந்து கரைந்துபோகவேண்டும்? அந்தப் பாழாய்ப்போன மேற்கத்திய கலாசாரம் என்பதுதான் என்ன? பப்ளிக் ப்ளேஸில் யார் பெத்த பெண்ணையோ, யார் பெத்த புள்ளையாண்டானோ இறுக்கி அணைத்து உம்மா கொடுத்தால், இவர்கள் ரத்தம் கொதிக்கலாமா, கூடாதா?

இன்னோரன்ன பாடங்கள் அடங்கிய அந்த தியரி வகுப்புகள், சுமார் ஒரு மாத காலத்துக்கு நடந்தது. இந்தப் பயிற்சி வகுப்புகளில் சொல்லிக்கொடுக்கப்பட்ட சில விஷயங்கள், மிகுந்த ஆச்சரியம் தரத்தக்கவை. உதாரணமாக, அமெரிக்கர்களின் பெயர்களை ஸ்பெல்லிங்குடன் புரிந்துகொள்வதற்கு வசதியாக, அந்நாட்டின் ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் டெலிபோன் டைரக்டரிகளை வாங்கி, வாய்விட்டு உரக்கப் படிக்கச் சொல்லியிருக்கிறார்கள்! விமான கால அட்டவணைகளை விரித்து வைத்துக்கொண்டு மனப்பாடம் செய்யச் சொல்லியிருக்கிறார்கள். அமெரிக்காவில் எங்கெங்கே விமானப் பயிற்சிப் பள்ளிகள் இருக்கின்றன என்று பார்த்து, ஒவ்வொரு பள்ளிக்கும் அப்ளிகேஷன் அனுப்பியிருக்கிறார்கள். Flight simulator software என்று சொல்லப்படும் விமானம் ஓட்டக் கற்றுத்தரும் ஒருமாதிரியான வீடியோ கேம் கேசட்டை வாங்கி வைத்து விமானம் ஓட்டக் கற்றுக்கொடுத்திருக்கிறார்கள்.

இதற்கெல்லாம் முன்னால் ஹிந்தி சினிமா பாணியில் இன்னொரு சம்பவம் நடந்தது. நாலு பேரில் ஒருத்தனான ஹஜ்மி, கராச்சி வந்து சேர்வதற்கு முன்னால், குவெட்டா நகரில் ஒரு ராத்திரி தங்கும்படி இருந்தது. ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட, மிகுந்த பாதுகாப்பான ஓரிடத்தில்தான் அவன் தங்கினான்.

அப்படித் தங்கிய ராத்திரி, அவன் இருந்த அறைக்குப் பக்கத்து அறையில், எகிப்தைச் சேர்ந்த இன்னொரு இளைஞன் தங்கியிருப்பதைப் பார்த்துப் போய் ஹலோ சொன்னான். ஒருத்தரை ஒருத்தர் மூஞ்சியைப் பார்த்தாலே என்ன காரியத்துக்கு, எங்கிருந்து, யார் மூலம் வருகிறார்கள் என்று தெரியாதா என்ன? தவிரவும் அது ஒன்றும் பப்ளிக் லாட்ஜ் அல்ல. ஒரு தனியார் கட்டடம். அல் காயிதாவின் பல போராளிகள் அவ்வப்போது வந்து தங்கிச் செல்வதற்கென்றே இருந்த ஒரு பிரைவேட் சுங்குவார்சத்திரம் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

ஹஜ்மி அங்கே சந்தித்த சக தீவிரவாதி யார், என்ன என்று விசாரித்தபோது, அவன் தன் பெயர் முஹம்மது அட்டா என்று சொன்னான்.

'ஓஹோ அப்படியா, எங்கே போகிறாய்?' என்று கேட்டான் ஹஜ்மி.

'இந்தமாதிரி, திடீரென்று ஆப்கனிஸ்தானுக்கு வரச்சொன்னார்கள். அதான் போய்க்கொண்டிருக்கிறேன். எதற்கு என்று தெரியவில்லை' என்று பதில் சொன்னான் அட்டா.

'சரி, வேறு எதாவது காரியமாக இருக்கும்' என்று, அத்துடன் தன் அறைக்குப் போய்விட்டான் ஹஜ்மி.

நம்பித்தான் ஆகவேண்டும். ஆப்கனிலிருந்து கராச்சிக்கு வந்துகொண்டிருந்த ஹஜ்மியும் ஆப்கனுக்குப் போய்க்கொண்டிருந்த அட்டாவும் தாங்கள் இருவருமே ஒரே காரியத்துக்காகத்தான் பயிற்றுவிக்கப்படுகிறோம் என்பதை அப்போது அறிந்திருக்கவில்லை. பின்னால் அமெரிக்காவுக்கு வந்தபிறகுதான் அவர்களுக்கு அந்த விவரம் தெரியும்.

இது ஒருபுறம் இருக்க, கராச்சி வகுப்புகள் நல்லபடியாக முடிந்ததும் அந்த நான்கு பிள்ளைகளையும் காலீத் ஷேக், கோலாலம்பூருக்கு அழைத்துச் சென்றார். என்னடா இது, உலகம் சுற்றும் வாலிபன் எம்.ஜி.ஆர் மாதிரி சுற்றுகிறார்களே என்று தோன்றுகிறதா? எல்லாமே காரணத்தோடுதான்.

இந்த மத்தியக் கிழக்குப் போராளிகள் எல்லோருக்குமே அமெரிக்க விசா வாங்குவதில் ஏதாவது பிரச்னை வரலாம் என்று அல்காயிதா மேலிடம் நினைத்தது. எந்தப் பிரச்னையும் இல்லாமல் அமெரிக்கா போய்ச் சேருவது ஒன்றுதான் இலக்கு. ஆகவே, நேரடியாகப் பந்து போடாமல் ரவுண்ட் தி விக்கெட் போடும் முறையைப் பின்பற்ற முடிவு செய்தார்கள்.

ஹஜ்மியும் மிஹ்தரும் ஏமன் குடிமக்கள் என்பதற்கான ஆதாரங்களை உபயோகித்து, கோலாலம்பூரிலிருந்து மலேசியா சென்று, அங்கிருந்து அவர்களது சவூதி பாஸ்போர்ட்டை உபயோகித்து அமெரிக்காவுக்குச் செல்லவேண்டும் என்பது திட்டம். ஹஜ்மியின் பாஸ்போர்ட்டில் காலீத் ஷேக் சில 'பாதுகாப்பு ஏற்பாடு'களைச்

செய்திருந்தார். அதன்படி ஹஜ்மி, சவூதி அரேபியாவிலிருந்து துபாய் வழியாக கோலாலம்பூர் வந்தது போலவே அதிகாரிகளுக்குத் தெரியும். கராச்சியிலிருந்து அவன் கோலாலம்பூர் வந்து சேர்ந்த விவரத்தை காலீத் ஷேக் முற்றிலுமாக அழித்திருந்தார். பாஸ்போர்ட் கசமுசாக்களில் அவர் ஒரு விற்பன்னர். ஆகவே, யாருக்கும் எந்தச் சந்தேகமும் வந்துவிடாதபடி பரிசுத்தமான பாஸ்போர்ட் மாதிரியே தயார் செய்திருந்தார்.

இன்னொரு பக்கம், கல்லத் மற்றும் அபு பாரா இருவரும் கோலாலம்பூர் சென்று விமான நிலைய பாதுகாப்பு வளையங்கள் பற்றி ஆராய ஆரம்பித்தார்கள். அங்கே அவர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்தவர் ஹம்பாலி.

அப்போது, அல்காயிதாவின் தென்கிழக்கு ஆசியாவின் பிரதிநிதி போலவே செயல்பட்டுக்கொண்டிருந்தது ஹம்பாலியின் ஜெமா இஸ்லாமியா அமைப்பு. கல்லத் மற்றும் அபூ இருவரையும் ஹம்பாலி தன் வீட்டிலேயே தங்க வைத்தார்.

பின்லேடனின் உத்தரவு என்னவென்றால், கல்லத்தும் அபு பாராவும் பாதுகாப்புடன் சில விமானப் பயணங்களை மேற்கொண்டு, விமான பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கவனிக்கவேண்டும். இது முதலாவது. அடுத்து, விமான காக்பிட்டின் அமைப்பு, கதவு திறந்து மூடப்படும் சமயங்கள், விமானி எப்போதெல்லாம் வெளியே வந்து பாத்ரூம் போகிறார், விமானப் பணிப்பெண்கள் சிற்றுண்டி பரிமாறத் தொடங்கும் சமயங்கள் என்பது போன்ற தகவல்களைக் கவனித்துக் குறித்துக் கொள்வது. கல்லத் மற்றும் அபு பாராவுடன் சௌகரியமாக உரையாடுவதற்காக, ஹம்பாலி நன்றாக அரபு மொழி பேசத்தெரிந்த ஒரு மூன்றாம் நபரையும் அழைத்துக்கொண்டார்.

1999, டிசம்பர் 31-ம் தேதி கல்லத் முதல்முதலாக கோலாலம்பூரிலிருந்து பாங்காக் செல்லும் விமானம் ஒன்றில் ஏறினான். மறுநாள் ஒரு அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விமானத்தில் ஏறி ஹாங்காங் சென்றான்.

அந்த விமானத்தில் கல்லத் முதல் வகுப்பு டிக்கெட் எடுத்திருந்தான். அது ஒரு தவறான செயல் என்று அவனுக்குப் பிறகுதான் புரிந்தது. ஏனெனில், அந்த விமானத்தில் முதல் வகுப்பு இருக்கையில் அமர்ந்தபடி காக்பிட்டைக் கவனிக்க முடியாது. இருப்பினும் விமானப் பாதுகாப்பு நடவடிக்கைகளை அறிந்துகொள்ளும் பொருட்டு, தனது டாய்லெட் கிட்டில் ஒரு கட்டிங் ப்ளையரை வைத்து எடுத்துச் சென்றிருந்தான்.

ம்ஹூம். எந்த செக்யூரிடி பிரச்னையும் இல்லை. சுலபமாக அவனால் பயணம் செய்யமுடிந்தது. மறுநாள் இன்னொரு விமானம் ஏறி பாங்காக் வந்து சேர்ந்தான். இங்கே மீண்டும் அவனது லக்கேஜ்களைப் பரிசோதித்த விமான நிலைய அதிகாரிகள், இம்முறை அவனது டாய்லெட் கிட்டையும் திறந்து பார்த்தார்கள். அந்த கட்டிங் ப்ளையரை எடுத்து அப்படியும் இப்படியுமாகத் திருப்பிப் பார்த்துவிட்டு, எந்தக் கேள்வியும் எழுப்பாமல் அப்படியே வைத்துக் கொடுத்து, வெளியே அனுப்பினார்கள்.

விமான சிப்பந்திகள் எல்லோரும் உத்தமோத்தமர்களாக இருக்கவேண்டும். அவன் முகத்தில் இருந்த தீவிரவாதக் களை எதுவும் அவர்கள் கண்ணில் படவில்லை. கல்லத்தின் இந்த ஜாலி தீர்த்தயாத்திரை சுபமாக முடிந்ததும், திட்டத்தின் அடுத்த கட்டத்தை நோக்கி அல் காயிதா நகர்ந்தது.

ஜனவரி 15-ம் தேதி ஹஜ்மியும் மிஹ்தரும் லாஸ் ஏஞ்சல்ஸுக்குப் பத்திரமாகப் போய்ச் சேர்ந்தார்கள். அவர்கள் அமெரிக்காவைத் தொட்டுவிட்ட தகவல் உறுதியானதும் 9/11 சம்பவத்தில் தொடர்புடைய அடுத்த அணியை ஆப்கனிஸ்தானுக்குப் பயிற்சிக்கென வரவழைத்தார் ஒசாமா பின்லேடன்.

இந்த அணியில் இருந்த நான்கு பேரும் மேலை நாடுகளில் கல்வி கற்றவர்கள். எகிப்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், லெபனான் மற்றும் ஏமனிலிருந்து வந்தவர்கள். நால்வருமே ஜெர்மனியிலுள்ள ஹாம்பர்க் நகரில் ஒன்றாக வசித்தவர்கள். நால்வருக்கிடையிலும் நல்ல இணக்கம் உண்டு. இந்த நான்கு பேருமே செச்னியாவில் நடைபெறும் யுத்தத்தில் பங்குபெறலாம் என்ற நோக்கத்துடன்தான் அல் காயிதாவில் இணைந்து இருந்தார்கள். ஆப்கனில் பயிற்சி என்று அழைப்பு வந்தபோது கூட, அதன் பொருட்டாகத்தான் இருக்கும் என்று நினைத்தார்கள்.

ஆனால், அவர்களின் திறமையால் கவரப்பட்ட பின்லேடன், அவர்களை அமெரிக்காவுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கையில் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று முடிவு செய்தார்.

அந்த இரண்டாவது நாலு பேரில் ஒருத்தனாக வந்தவன்தான் அட்டா. அமெரிக்காவில் கடத்தப்பட்டு மோதிச் சிதறிய அந்த நான்கு விமானங்களையும் கடத்திய அத்தனை பேருக்கும் கமாண்டராக இருந்தவன்.